## வீதித்துறை உதவிச் செயற்திட்டம்- 2011

## 1. அபிப்பிராயம்

எனது பரிசோதனைகளிலிருந்து தென்படுவதும் நான் பெற்றுக் கொண்ட தகவல்களுக்கும் மற்றும் எனக்கு அளிக்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமைய, இந்த அறிக்கையின் 3.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களிலிருந்து எழும் சீராக்கங்களின் தாக்கங்களைத் தவிர,

(அ) செயற்திட்டமானது 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கேடுகளைப் பேணியிருந்ததுடன் நிதிக் கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களிற்கு இணங்க 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலைவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) எந்த நோக்கங்களுக்காக நிதி வழங்கப்பட்டதோ அந்த நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டன என்றும்,

(இ) 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டின் போதான விசேட (டொலர்) கணக்கிலிருந்தான பற்றுதல்கள் அதற்கான மீள்நிரப்பல்கள் என்பன செயற்திட்டத்தால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும், 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத்திகதியிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்தன என்றும்.

(ஈ) சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்களானவை (எஸ்ஓஈஎஸ்) அபிவிருத்தி கடன் உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகைகளிற்கு இணங்க மீளளிப்புக்கான விண்ணப்பங்களுக்கு ஆதாரமானவை என நியாயபூர்வமாக நம்பிக்கைகொள்ள முடியும் என்றும்,

(உ) எனது கடந்த ஆண்டிற்கான கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களை சீராக்குவதற்கு முகாமைத்துவத்தினால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ள என்றும்,

(ஊ) அபிவிருத்திக் கடன் உடன்படிக்கைகளில் விதந்துரைக்கப்பட்ட நிதியக் கட்டுப்பாடுகள் இணங்கப்பட்டுள்ளன என்றும்,

நான் அபிப்பிராயம் தெரிவிக்கின்றேன்.

## 2 நிதிக்கூற்றுக்கள்

### 2.1 நிதிசார் செயலாற்றல்

நிதிக்கூற்றுக்கள் மற்றும் கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான செயற்திட்டத்தின் செலவுகள் ரூபா 906,791,508 ஆக இருந்ததுடன் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவுகள் ரூபா 24,248,882,550 ஆகும். மீளாய்வாண்டிற்கான செலவினம், முன்னைய ஆண்டிற்கான செலவினம் மற்றும் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் என்பவற்றின் பொழிப்பொன்றை பின்வரும் கூற்று காட்டுகின்றது.

| விபரம் | திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செலவினம் | | 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் |
|---|---|---|---|
| | 2011 | 2010 | |
| | ரூபா | ரூபா | ரூபா |
| நிலையான சொத்துக்கள் - குறைத்தெழுதிய பெறுமதி | 7,270,878 | 120,123,681 | 138,769,169 |
| செயற்திட்ட செலவினம் | 96,986,530 | 54,148,005 | 368,338,229 |
| பயிற்சி | 5,411,577 | 2,929,744 | 49,647,082 |
| செயற்திட்ட மற்றும் ஏனைய ஆலோசனை | 34,955,627 | 29,053,173 | 105,067,138 |
| வடிவமைப்பு ஆலோசனை | - | -- | 122,604,637 |
| நடைபெறும் வேலை | 72,209,034 | | 72,209,034 |
| பொது வசதிகளை | - | 27,905 | 308,273,820 |

| | | | |
|---|---|---|---|
| இடமாற்றுதல் | | | |
| சிவில் வேலைகள் | 689,957,862 | 1,781,845,734 | 23,083,973,441 |
| | 906,791,508 | 1,988,128,242 | 24,248,882,550 |

## 2.2 விசேட (டொலர்) கணக்கு

நிதிக்கூற்றுக்கள் மற்றும் கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், சகல மூன்று உடன்படிக்கைகளிற்காகவும் மீளாய்வாண்டின் போது இலங்கை மத்திய வங்கியில் மூன்று விசேட (டொலர்) கணக்குகள் பேணப்பட்டிருந்தன. 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு குறித்த கணக்குகளின் மீதிகள் கீழே தரப்பட்டுள்ளன.

| | **4429 சீஈ** | | **4138 சீஈ** | | **4906 சீஈ** | |
|---|---|---|---|---|---|---|
| **விபரங்கள்** | **இலங்கை ரூபா** | **ஐ. அ. டொலர்** | **இலங்கை ரூபா** | **ஐ. அ. டொலர்** | **இலங்கை ரூபா** | **ஐ. அ. டொலர்** |
| 2011 சனவரி 1 இல் உள்ளவாறான மீதி | 360,215,150 | 3,246,556 | 333,585 | 3,007 | - | - |
| கூட்டுக :- | | | | | | |
| மீள் நிரம்பல்கள் | 310,534,794 | 2,823,444 | 312,245,230 | 2,787,106 | 32,559,455 | 285,860 |
| வெளிநாட்டு நாணயமாற்று இலாபம்/ (நட்டம்) | 4,004,250 | - | (82,484) | - | 114 | - |
| | **674,754,194** | **6,070,000** | **312,496,331** | **2,790,113** | **32,559,569** | **285,860** |
| கழி:- | | | | | | |
| மீளெடுப்புக்கள் | 556,930,448 | 5,035,563 | 215,797,372 | 1,941,141 | 22,548,915 | 197,971 |
| 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி | **117,823,746** | **1,034,437** | **96,698,959** | **848,972** | **10,010,654** | **87,889** |

## 3. கணக்காய்வு அவதானிப்புகள்

### 3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கந்தளாய் - திருகோணமலை வீதியின் புனரமைப்பு மற்றும் மீள் நிர்மாண வேலைகளுக்காக 2011 செப்தெம்பர் 01 ஆம் திகதி முதல் நவம்பர் 30 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்காக 4 ஒப்பந்தக்காரர்களால் சமர்ப்பிக்கப்பட்ட ரூபா 74,487,646 பெறுமதியான இடைக்கால கொடுப்பனவுச் சான்றிதழ்கள் (ஐபீசீ) மீளாய்வாண்டின் போது கணக்கிற்குக் கொண்டுவரப்பட்டிருக்கவில்லை. இதன் படி, நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்ட நடைபெற்றுக் கொண்டிருக்கும் சிவில் வேலைக் கிரயம் மற்றும் பிடித்து வைத்தல் பணத்தின் மீதி முறையே ரூபா 74,487,968 ஆலும் ரூபா 5,891,968 ஆலும் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தன.

(ஆ) செயற்திட்ட காலத்தின் இறுதியில் உள்ளவாறான நிலையான சொத்துக்கள் மாற்றப்படுவதற்குப் பதிலாக செயற்திட்டம் ரூபா 92.688 மில்லியன் பெறுமதியான வீதி ஆய்வு வாகனம் உள்ளடங்கலாக ரூபா 143.26 மில்லியன் பெறுமதியான நிலையான சொத்துக்கள், வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு அவ்வப்போது மாற்றியிருந்தது. மீளாய்வாண்டின் இறுதியில் செயற்திட்டத்தினால் அது தொடர்பாக ரூபா 42,564,122 தொகையான பெறுமானத்தேய்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. செயற்திட்டமும் வீதி அபிவிருத்தி அதிகாரசபையும் அச் சொத்துக்களின் பயன்தரு ஆயுள் காலத்தை மதிப்பிடுவதற்காக ஒத்த நடைமுறையினை கடைப்பிடித்திருக்கவில்லை என்பது மேலும் அவதானிக்கப்பட்டது. மேலும், செயற்திட்டம் இலங்கை கணக்கீட்டு நியமம் 18 இன் ஏற்பாடுகளுக்கு முரணாக கொள்வனவு செய்யப்பட்ட ஆண்டிற்காக சொத்துக்கள் மீது பெறுமானத்தேய்விற்கு ஏற்பாடு செய்திருக்கவில்லை ஆனால் கைதவிர்க்கப்பட்ட ஆண்டிற்காக முற்றாகப் பெறுமானத் தேய்விட்டிருந்தது.

(இ) எனது முன்னைய ஆண்டிற்கான அறிக்கையில் குறிப்பிடப்பட்டவாறு செயற்திட்ட முகாமைத்துவப் பிரிவின் பல்வேறு குறைபாடுகள் காரணமாக செயற்திட்டத்தினால் 2010 ஆம் ஆண்டிற்காக ரூபா 102 மில்லியன் தொகையை மீளப்பெற முடியாதிருந்தது. இதன் விளைவாக பொதுத்திறைசேரியினால் வழங்கப்படும் நிதியில் இருந்து செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. இதன் படி செயற்திட்டம் மீளாய்வாண்டின் போது ரூபா 192,993,362 தொகையை பொதுத்திறைசேரிக்கு மீளச் செலுத்தியிருந்தது.

## 3.2 பௌதீகச் செயலாற்றல்

(அ) செயற்திட்டத்தின் முதலாம் கட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட வீதிப் புனரமைப்பு மற்றும் மீள்நிர்மாண வேலைகள்

ஆரம்பத்தில் 13 வீதிகளின் புனரமைப்பும் மீள்நிர்மாண வேலைகளை மேற்கொள்ளப்படுவதற்கு செயற்திட்டம் திட்டமிட்டிருந்தது. முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம், 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அவ் வீதிகளின் புனரமைப்பும் புனர்நிர்மாண வேலைகள் பல கூடியளவில் பூர்த்தி செய்யப்பட்டிருந்தன. இது தொடர்பாக கணக்காய்வின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) செயற்திட்டத்தினால் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்த 620 கி.மீ நீளமான மேற்குறித்த 13 வீதிகளில் 601 கி.மீ நீளமான 12 வீதிகளின் புனரமைப்பு மற்றும் புனர்நிர்மாண வேலைகள் மாத்திரம் 2011 ஆம் ஆண்டின் இறுதியில் பூர்த்தியடைந்திருந்தன. வடமத்திய மாகாணத்தில் அமைந்துள்ள கல்குலம – ரம்பாவ வீதியினை மேம்படுத்தல் வேலைகள் கைவிடப்பட்டிருந்தன.

(ii) மேற்குறித்த வீதிகளின் மேம்பாட்டு வேலைகளுக்கான ஒப்பந்தங்களின் ரூபா 11,450 மில்லியன் கூட்டுத்தொகையான ஆரம்ப மதிப்பீட்டுக் கிரயம், உரிய வீதிகளின் கணியப்பட்டியல்களில் செய்த மாற்றங்களின் காரணத்தினால் ரூபா 2,246 மில்லியன் தொகையால் பின்னர் அதிகரித்திருந்தது. நித்தம்புவை – கண்டி மற்றும் காலி – தெனியாய வீதிகளில் ஆரம்ப ஒப்பந்தக் கிரயம் முறையே 62% ஆலும் 40% ஆலும் அதிகரித்திருந்தன. அமைச்சரவையினதும்

கடன் வழங்கும் முகவரகங்களினதும் அங்கீகாரம் இன்றி ஐந்தொகையில் சிவில் வேலைகள் மற்றும் நிர்மாணிப்பு மேற்பார்வையின் கீழ் ரூபா 9,462,807,417 தொகை செலுத்தப்பட வேண்டியதாகக் காட்டப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(iii) பல ஒப்பந்த வேலைகள் 91 நாட்கள் முதல் 2½ ஆண்டுகள் வரையான கால வீச்சில் தாமதமாகிப் பூர்த்தியடைந்திருந்தமை அவதானிக்கப்பட்டது. இவற்றில் ஆறு ஒப்பந்தங்கள் ஒரு வருடத்திற்கும் மேலான காலமாகத் தாமதமாகி இருந்தன. ஒப்பந்தங்களைப் பூர்த்திசெய்வதிலுள்ள அவ்வாறான தாமதம் நிர்மாண வேலைகளின் கிரயம் ரூபா 4,196 மில்லியன் தொகையால் உயர்வடைவதற்குக் காரணமாகியிருந்தது.

(iv) மேலும், இங்கிரிய இரத்தினபுரி வீதியின் நிர்மாண வேலைகள் தொடர்பாக ஒப்பந்தக்காரர்களின் கொடுப்பனவு கோரிக்கைகளை செயற்திட்டத்தால் தீர்க்கப்படுவதில் ஏற்பட்ட தாமதம் காரணமாக செலுத்தப்பட்டிருந்த ரூபா 763,374 தொகையான தண்டப்பணம் சம்பந்தப்பட்ட ஒப்பந்தத்தின் கிரயத்தில் உள்ளடக்கப்பட்டிருந்தது. மேலும் ஒப்பந்தக்காரருக்கும் செயற்திட்டத்திற்கும் இடையே ஏற்பட்ட பிணக்குகளைத் தீர்ப்பதற்காக நியமிக்கப்பட்ட பிணக்குகள் இணக்க சபையின் அங்கத்தவர்களுக்கு ரூபா 2,700,250 தொகையான கொடுப்பனவும் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(v) நித்தம்புவை – கண்டி வீதி புனரமைப்பு வேலைகளைப் புலனாய்வு செய்வது தொடர்பாக மொறட்டுவை பல்கலைக்கழகத்தினால் 2010 யூன் மாதத்தின் போது சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையின் படி திட்டமிடல் கட்டத்திலிருந்து நிர்மாண வேலைகள் பூர்த்தியடையும் வரை ஒப்பந்தக்காரரினதும் ஆலோசகரினதும் கவனக்குறைவானதும் நியமத்தின் பிரகாரம் இல்லாத பல சந்தர்ப்பங்கள் சுட்டிக்காட்டப்பட்டிருந்தன. அதில் உள்ளடக்கப்பட்ட சில அவதானிப்புகள் பின்வருமாறாகும்.

- ஆரம்பக் கட்டத்தில் திட்டமிடல் ஆலோசகரினால் வீதியின் மேற்பக்கம், போக்குவரத்து முதலியவை தொடர்பாக முறையான மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

- பிணைப்பு கட்டம் (Binder Course) மற்றும் வெளிப்பகுதி கட்டம் (wearing Course) ஆகிய வீதி நிர்மாணிப்பின் கலப்புத் திட்டமிடல் நியமங்களில் அவதானிக்கப்பட்ட குறைபாடுகள்

- குறைந்த தரத்திலான அஸ்போல்ட் உற்பத்தி, தார் போதியளவில் இடப்பட்டிராமை மற்றும் தேவையான அளவு மொத்தத்திற்கு கொண்டுவரப்பட்டிராமை போன்ற காரணங்களினால் வீதியின் வெளிப்புறத்தில் வெடிப்புகள் உருவாகியிருந்தன. சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகளை ஒப்பந்தக்காரர் சீராக்கியுள்ளார் என்பதனை உறுதிப்படுத்துவதற்கு முறையான சான்றுகள் பெறப்பட முடியாதிருந்தன.

எவ்வாறாயினும், துறைமுகங்கள் மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சுச் செயலாளர், செயற்திட்டத்திற்கு மேலதிகச் செலவு ஏற்படாது ஒப்பந்தக்காரரினாலேயே வீதியின் வேலைகளிலேற்பட்டிருந்த குறைபாடுகளைச் சீராக்குவதற்கான நடவடிக்கைகளை எடுத்திருந்தார். மேலும், திருத்த வேலைகளைக் கண்காணித்தல் பாதிப்புக்களுக்கான காரணத்தினை பரீட்சித்தல், வேலைத் தளத்தினை காலரீதியாகப் பரிசோதனை செய்தல் வேலைகளின் தரத்தினை மேம்படுத்துவது தொடர்பாக வெளிக்களப் பதவியினர்களுக்கு ஆலோசனை வழங்குதல் என்பவற்றிற்கு துறைமுகங்கள் மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சு, வீதி அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் சர்வதேச அபிவிருத்திச் சங்கம் என்பவற்றின் உத்தியோகத்தர்களையும் ஒப்பந்தக்காரர் ஆலோசகர் ஆகியோரின் பிரதிநிதிகளையும் உள்ளடக்கிய குழு 2010 யூலை 27 ஆம் திகதி நியமிக்கப்பட்டிருந்தது. 2012 மார்ச் 31 ஆம் திகதியளவில் வீதியின் குறைபாடுகளைத் தீர்ப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், வீதியின் 59+911 கி.மீ. முதல் 114+500 கி.மீற்றர் வரையான பகுதியின் வெளிப்பகுதி பதனிடல் நடவடிக்கை 85% பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. எவ்வாறெனினும், 2012 ஏப்ரல் 30 ஆம் திகதியில் உள்ளவாறு வீதியின் 39+400 கி.மீ. முதல் 59+911 கி.மீற்றர் வரையான பகுதியின் வெளிப்பகுதி பதனிடும் பணிகள் மாத்திரமே பூர்த்திசெய்யப்பட்டிருந்தன.

(ஆ) செயற்திட்டத்தின் இரண்டாம் கட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட வீதிப் புனரமைப்பும் புனர்நிர்மாண வேலைகளும்

---

செயற்திட்டத்தின் இரண்டாம் கட்டத்தின் கீழ் கந்தளாய் - திருகோணமலை வீதியின் (கி.மீ. 157+000 முதல் 199+300 கி.மீ. வரையான பகுதி) கி.மீ. 42+300 இன்

புனரமைப்பும் புனர்நிர்மாண நடவடிக்கைகளும் 2011 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்டது. வீதியின் மொத்த நீளம் நான்காகப் பிரிக்கப்பட்டு தேசிய விலை மனுக் கோரல் முறையின் கீழ் விலைகள் கோரப்பட்டு நான்கு ஒப்பந்தக்காரர்களுக்கு ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டிருந்தன. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(i) கணியப் பட்டியல்களிலுள்ள ஒரே வகையான விடயங்களுக்கு தனிப்பட்ட ஒப்பந்தக்காரர்களினால் வெவ்வேறு விலைகள் பயன்படுத்தப்பட்டிருந்தன. மேலும், ஒப்பந்தக்காரர்களினால் பயன்படுத்தப்பட்டிருந்த சகல விலைகளும் பொறியியலாளர் மதிப்பீட்டில் காண்பிக்கப்பட்ட விலைகளிலும் பார்க்க அதிகளவிலானதாகக் காணப்பட்டன. வீதியின் தரைத்தோற்றும் மற்றும் நகர நிலை என்பவற்றின் காரணமாக ஒப்பந்தக்காரரினால் வெவ்வேறு விலைகள் பயன்படுத்தப்பட்டிருந்தன என இது குறித்து துறைமுகங்கள் மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சுச் செயலாளரினால் விளக்கமளிக்கப்பட்டிருந்தது. மேலும் பொறியியலாளர்கள் பெருந்தெருக்களின் விலைப் பட்டோலைகளை அடிப்படையாகக் கொண்டே மதிப்பீடுகளைத் தயாரித்திருந்தனர். இதன் படி, பொறியியலாளர்களின் மதிப்பீடுகளைப் பார்க்கிலும் ஒப்பந்தக்காரர்களின் மதிப்பீடு குறிப்பிடத்தக்க அளவில் உயர்வடைந்துள்ளமை கணக்காய்வின் போது கண்டறியப்பட்டது.

(ii) ஒப்பந்தக்காரர்களுடன் ஏற்படுத்தப்பட்டிருந்த ஒப்பந்த உடன்படிக்கைகளின் பொது நிபந்தனைகளின் VII ஆம் பிரிவின் 8.3 ஆம் பந்தியின் பிரகாரம் ஒப்பந்தம் ஏற்றுக்கொள்ளப்பட்டு 28 நாட்களுக்குள் வருடாந்த வேலைத் திட்டங்கள் செயற்திட்டத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். எவ்வாறெனினும், வீதியின் 01 ஆம் பிரிவினைத் தவிர்த்து 2011 ஆம் ஆண்டிற்காக அவ்வாறான வருடாந்த வேலைத் திட்டங்களின் பிரதிகள் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) ஆலோசகர்களின் செயல் முன்னேற்ற அறிக்கை மற்றும் இடைக்கால கொடுப்பனவு சான்றிதழ்களின் படி ஒப்பந்த வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு 173 நாட்களின் பின்னர் ஒப்பந்த வேலைகளின் செயல் முன்னேற்றம் பின்வருமாறு காண்பிக்கப்பட்டுள்ளது.

| வீதிப் பிரிவு | திசெம்பர் 31 இல் உள்ளவாறு<br>நிதிசார் செயல் முன்னேற்றம் | பௌதீக செயல் முன்னேற்றம | 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வேலைகளைப் பூர்த்திசெய்வதற்கு எஞ்சியுள்ள நாட்கள் |
|---|---|---|---|
| | % | % | |
| கி.மீ. **157+000** முதல் **167+280** வரை | **13.00** | **21.37** | **285** |
| கி.மீ. **167+280** முதல் **178+000** வரை | **3.07** | **19.67** | **293** |
| கி.மீ. **178+000** முதல் **190+000** வரை | **2.99** | **17.87** | **305** |
| கி.மீ. **190+000** முதல் **199+300** வரை | **7.00** | **18.37** | **306** |

(இ) வீதிப் பராமரிப்பு நம்பிக்கைப் பொறுப்பு நிதியம்

2005 திசெம்பர் 09 ஆம் திகதி திறைசேரிச் செயலாளரினால் கையொப்பமிடப்பட்ட நம்பிக்கைப் பொறுப்பு உறுதியின் கீழ் வீதிப் பராமரிப்பு பொறுப்பு நிதியம் ஸ்தாபிக்கப்பட்டிருந்தது. நம்பிக்கைப் பொறுப்பு உறுதியின் 06 ஆம் பிரிவின் படி, வீதிப் பராமரிப்பிற்காக ஒதுக்கப்பட்ட பெற்றோல் மற்றும் டீசல்களின் விற்பனையினால் கிடைக்கும் வருமானம் மற்றும் தேசிய பாதீட்டினால் மேற்கொள்ளப்பட்ட ஒதுக்கீட்டின் கீழ் பெறப்பட்ட தொகையும் பொறுப்பு நிதியத்திற்குச் செலவு வைக்கப்பட வேண்டும்.

வீதி அபிவிருத்தி அதிகாரசபையிலிருந்து விடுவிக்கப்பட்ட 8 உத்தியோகத்தர்களுடன் வீதிப் பராமரிப்பு பொறுப்பு நிதியத்தின் செயலகம் 2011 ஆம் ஆண்டின் போது ஸ்தாபிக்கப்பட்டிருந்தது. பொதுத் திறைசேரியினால் வருடாந்த ஒதுக்கீட்டு அதிகாரச்சட்டத்தினால் மேற்கொள்ளப்பட்ட ஒதுக்கங்களை மீளப்பெற்றும் அந் நிதியம் தேசிய வீதிப் பராமரிப்பு நோக்கங்களுக்காக அத்தகைய நிதிகளை விடுவித்தும் செயலகத்தினால் தற்போது செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. எவ்வாறெனினும், பெற்றோல் மற்றும் டீசல் விற்பனையிலிருந்து வரி வருமானதினைச் சேர்க்கப்படுவதற்கான முறை ஒன்றை ஸ்தாபிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

வீதிப் பராமரிப்பு பொறுப்பு நிதியத்திற்காக ஆலோசனைச் சேவைகளை வழங்குவதற்காக நியமிக்கப்பட்ட ஆலோசகர் முதலாவது உடன்படிக்கையை முடிவுறுத்தியிருந்ததுடன் மிகுதி நடவடிக்கையைப் பூர்த்தி செய்வதற்கு 2011 மே மாதம் முதல் புதிய உடன்படிக்கை ஒன்று கைச்சாத்திடப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. இதன் பிரகாரம், இரண்டாம் உடன்படிக்கையின் கீழ் ரூபா 15,263,439 தொகையான முற்பணம் செலுத்தப்பட்டிருந்தது. எவ்வாறெனினும், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும், ஆலோசகர்களினால் தொழிநுட்பக் கணக்காய்வு கைநூல் தொடர்பான இறுதி அறிக்கை, தொழிநுட்பக் கணக்காய்வு உதவி தொடர்பான அறிக்கை இறுதிச் செயற்திட்ட அறிக்கை என்பன சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.3 மனித வள முகாமைத்துவம்

---------------------------------------

மீளாய்வாண்டின் இறுதியில் செயற்திட்ட கண்காணிப்பு பிரிவு 31 பதவியணி அங்கத்தவர்களைக் கொண்டிருந்தது. எவ்வாறெனினும், முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் 32 பதவியணியினர் அங்கீகரிக்கப்பட்டிருந்தனர். 5 செயற்திட்டப் பொறியியலாளர் பதவிகள் வெற்றிடமாகக் காணப்பட்டதுடன் சிற்றூழியர் தரத்தில் 4 பேர் மிகையாக இருந்தனர். இதற்கு மேலதிகமாக திருகோணமலையில் உள்ள செயற்திட்ட ஆலோசனைப் பிரிவிற்காக 52 பதவிகள் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதியில் அது 38 அங்கத்தவர்களை மாத்திரமே கொண்டிருந்தது. 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஒப்பந்த நிபுணர்கள், பொறியியலாளர்கள், கணிய அளவையாளர்கள் போன்ற முக்கிய பதவிகளில் வெற்றிடம் நிலவியமை அவதானிக்கப்பட்டது.

## 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

---------------------------------------------

வீதி நிலை மற்றும் நடைபாதை நிலைகளை ஆய்வு செய்யும் நோக்கத்திற்காக முறையே ரூபா 92,688,961 பெறுமதியான பல் செயற்பாட்டு வலையமைப்பு அளவீட்டு வாகனம் (Multi Function Network Survey Vehicle) ஒன்றும் ரூபா 30,127,759 பெறுமதியான பார அளவீட்டு இயந்திரம் ஒன்றும் (Falling Weight Deflactometer) 2010 ஆம் ஆண்டின் போது செயற்திட்டத்தினால் கொள்வனவு செய்யப்பட்டு வீதி அபிவிருத்தி அதிகாரசபையிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. வீதி அபிவிருத்தி அதிகாரசபையிடம் இருந்து பெறபட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் போது 3932.78 கி.மீ. நீளமான வீதியும் 1,452.20 கி.மீ. நீளமான நடைபாதையும் ஆய்வு செய்யப்பட்டிருந்தன. மேலும், வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் முன்னேற்ற

அறிக்கையின் பிரகாரம் மீளாய்வாண்டின் போது ஆய்வு செய்வதற்கு எதிர்பார்த்த மொத்த வீதியின் நீளத்தில் 54% அளவிலான வீதியின் நீள அளவு மாத்திரமே பூர்த்திசெய்யப்பட்டிருந்தது.